**தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 600 006.**
**ந.க. எண் 22725 / இ1 / 2018, நாள் 27.06.2019**

பொருள் : பொது மாறுதல் – 2019–2020 ஆம் கல்வி ஆண்டில் ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / மாநகராட்சி / அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் – நாளது தேதியில் மாணாக்கர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் உபரி ஆசிரியர்கள் கண்டறியப்பட்டு – கூடுதல் தேவையுள்ள பள்ளிகளுக்கு பணிநிரவல் செய்தல் – அறிவுரைகள் வழங்குதல் – சார்ந்து.

பார்வை :
1. அரசாணை (1டி) எண் 231, பள்ளிக் கல்வித் (சி2) துறை, நாள் 11.08.2010
2. அரசாணை (1டி) எண் 217, பள்ளிக் கல்வித் (ப.க. 5(1)) துறை, நாள் 20.06.2019

*****

பார்வை 2 இல் காணும் அரசாணையில் 2019–2020 ஆம் கல்வி ஆண்டில் ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / மாநகராட்சி / அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் நாளது தேதியில் மாணாக்கர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஒவ்வொரு பள்ளியிலும் உள்ள உபரி ஆசிரியர்களைக் கண்டறிந்து அவர்களை ஒன்றியம் / மாவட்டத்திலுள்ள காலிப்பணியிடங்கள் மற்றும் கூடுதல் தேவையுள்ள பள்ளிகளுக்கு பணிநிரவல் செய்ய ஆணை வழங்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து தொடக்கக் கல்வி இயக்ககத்தின் கீழ் செயல்படும் பள்ளிகளுக்குக் கீழ்கண்டவாறு பணிநிரவல் செய்யுமாறு முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

<u>1. பள்ளிகளில் உபரி ஆசிரியர்களைத் தெரிவு செய்தல்</u>

ஒன்றியத்தில் உபரி ஆசிரியர் உள்ள ஒவ்வொரு பள்ளியிலும் ஆசிரியர் அப்பள்ளியில் சேர்ந்த தேதியின் அடிப்படையில் பள்ளியில் இளையவர்களை தெரிவு செய்ய வேண்டும்.

<u>2. ஒன்றியத்திற்குள் உபரி ஆசிரியர்களைப் பணிநிரவல் செய்தல்</u>

தெரிவு செய்யப்பட்ட உபரி ஆசிரியர்களை அவ்வொன்றியத்தில் அப்பதவியில் சேர்ந்த தேதியின் அடிப்படையில் முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்க வேண்டும். இம்முன்னுரிமைப் பட்டியலில் முதலில் இருந்து ஆசிரியர்கள் பணிநிரவல் செய்யப்பட வேண்டும். எஞ்சியுள்ள உபரி ஆசிரியர்கள் சார்ந்த மாவட்டத்திலுள்ள வேறு ஒன்றியங்களுக்கு பணிநிரவல் செய்யப்பட வேண்டும்.

<u>3. மாவட்டத்திற்குள் (ஒன்றியம் விட்டு ஒன்றியம் / வேறு அலகு) உபரி ஆசிரியர்களைப் பணிநிரவல் செய்தல்</u>

ஒவ்வொரு ஒன்றியத்திலும் அவ்வொன்றியத்திற்குள் பணிநிரவல் செய்தது போக மீதமுள்ள உபரி ஆசிரியர்கள் அனைவரையும் அவர்களது சம்பந்தப்பட்ட பதவியில் பணியில்

சேர்ந்த தேதியின் அடிப்படையில் முன்னுரிமைப் பட்டியல் தயாரித்து, அப்பட்டியலில் முதலில் இருந்து வரிசையாக மாவட்டத்திற்குள் உள்ள பிற ஒன்றியங்களுக்குப் / பிற அலகுகளுக்கு பணிநிரவல் செய்ய வேண்டும்.

சார்ந்த மாவட்டத்தில் உள்ள நிரப்ப தகுந்த காலிப்பணியிடங்கள் மற்றும் கூடுதல் தேவை பணியிடங்களின் எண்ணிக்கைக்கேற்ப முன்னுரிமைப் பட்டியலிலுள்ள ஒன்றியம் விட்டு ஒன்றியம் பணிநிரவல் செய்யப்பட வேண்டிய ஆசிரியர்களை கலந்தாய்வுக்கு அழைத்து முன்னுரிமையின்படி கலந்தாய்வு நடத்தி பணிநிரவல் ஆணை வழங்க வேண்டும்.

**4. மாவட்டத்திற்குள் காலிப் பணியிடம் மற்றும் கூடுதல் தேவைப் பணியிடங்களை விட உபரி ஆசிரியர்கள் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் மாவட்டங்களில் செய்ய வேண்டியவை**

ஒட்டுமொத்த மாவட்டத்திற்குள் நிரப்பத் தகுந்த காலிப் பணியிடம் மற்றும் கூடுதல் தேவைப் பணியிடங்களின் எண்ணிக்கையை விட பணிநிரவல் செய்யப்பட வேண்டிய ஒட்டுமொத்த மாவட்டத்தில் உள்ள உபரி ஆசிரியர்கள் எண்ணிக்கை கூடுதலாக இருப்பின் முதலில் அந்த மாவட்டத்தில் உள்ள அனைத்து உபரி ஆசிரியர்களையும் ஒருங்கிணைத்து அவர்களது சம்பந்தப்பட்ட பதவியில் பணியில் சேர்ந்த தேதியின் அடிப்படையில் முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்க வேண்டும்.

காலிப் பணியிடம் மற்றும் கூடுதல் தேவைப் பணியிட எண்ணிக்கைக்கேற்ப அப்பட்டியலில் இளையவர்களை மட்டும் வரிசைக்கிரமமாக முதலில் அவருக்குரிய ஒன்றியத்திற்குள்ளும், பிறகு ஒன்றியம் விட்டு ஒன்றியத்திற்கும் பணிநிரவல் செய்ய வேண்டும்.

உதாரணமாக ஒரு மாவட்டத்தில் ஒரு பதவியில் 80 உபரி ஆசிரியர்கள் உள்ள நிலையில் அம்மாவட்டத்தில் கூடுதல் தேவை மற்றும் நிரப்ப தகுந்த காலிப் பணியிடங்கள் எண்ணிக்கை 40 என இருப்பின், மேற்காண் உபரி ஆசிரியர் பட்டியலில் 1 முதல் 40 வரையிலான உபரி ஆசிரியர்களை, அவர்கள் பணிபுரியும் பள்ளியிலேயே தொடர்ந்து பணிபுரிய அனுமதித்தும், வ.எண் 41 முதல் 80 வரையில் உள்ள உபரி ஆசிரியர்களை அவர்கள் வரிசை முன்னுரிமையின்படி அவருக்குரிய ஒன்றியத்திற்குள்ளும், ஒன்றியத்தில் பணியிடம் இல்லாத நிலையில் ஒன்றியம் விட்டு ஒன்றியத்திற்கும் பணிநிரவல் செய்ய வேண்டும்.

எனவே இப்பணியினை தனிக் கவனம் கொண்டு எவ்வித புகாருக்கும் இடமின்றி செய்திட அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

27/4/2019

தொடக்கக் கல்வி இயக்குநர்

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்

27/4/19

நகல்

அரசு முதன்மைச் செயலர், பள்ளிக் கல்வித் துறை, தலைமைச்செயலகம், சென்னை – 9 – அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.